

துணை முதலமைச்சர் / மாநில திட்டக் குழுவின் அலுவல் சார் துணைத் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (24.2.2025) சேப்பாக்கம் எழிலகத்தில் மாநில திட்டக் குழுவின் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயசந்திரன், மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் திருமதி எஸ்.சுதா, மாநில திட்டக் குழுவின் முழு நேர உறுப்பினர் பேரா. இராம. சீனுவாசன், கூடுதல் முழு நேர உறுப்பினர் பேரா. ம. விஜயபாஸ்கர், பகுதி நேர உறுப்பினர்கள் சட்ட மன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், கே. தீனபந்து, (ஓய்வு), திருமதி மல்லிகா ஸ்ரீனிவாசன், பத்மஸ்ரீ நர்த்தகி நடராஜ், பேரா. சுல்தான் அஹமத் இஸ்மாயில், மருத்துவர் ஜோ. அமலோற்பவநாதன், மருத்துவர் கு. சிவராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.2.2025) திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருக்கோயில் பணியாளர்களுக்கு சேப்பாக்கம் அய்யா பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி முத்துக்காளத்தி தெரு ஆகிய இடங்களில் கட்டப்பட்ட பணியாளர் குடியிருப்புகளில், குடியிருப்பதற்கான ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மாநில திட்டக் குழுவின் அலுவல்சார் துணைத் தலைவர்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் திட்டக் குழு ஆய்வுக் கூட்டம்!

சென்னை, பிப்.25-

**துணை முதலமைச்சர் / மாநில திட்டக் குழுவின் அலுவல் சார் துணைத் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (24.2.2025) சென்னை சேப்பாக்கத்தில் உள்ள மாநில திட்டக் குழு அலுவலகத்தில், மாநில திட்டக் குழுவின் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.**

இவ்வாய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் / மாநில திட்டக் குழுவின் அலுவல் சார் துணைத் தலைவர் அவர்கள் மாநில திட்டக் குழுவால் இதுவரை தயாரிக்கப்பட்டு முதலமைச்சர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அரசின் முன்னோடி திட்டங்களுக்கான மதிப்பீட்டு ஆய்வுகள், சிறப்பு ஆய்வுகள் குறித்தும், தற்சமயம் நடைபெற்று வரும் ஆய்வுகள் குறித்தும், மாநில திட்ட குழுவால் நடைமுறைப்படுத்தப்படும் சிறப்பு திட்டங்கள் குறித்தும் விரிவாக கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார். மேலும் அரசின் முன்னோடி மக்கள் நலத்திட்டங்களின் பயன்கள் மற்றும் அதனால் பொது மக்களுக்கு ஏற்படும் தாக்கங்கள் குறித்தும் கேட்டறிந்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களால், தமிழ்நாட்டின் குக்கிராமங்களில் உள்ள சாமானிய மக்கள் முதல் நகரத்தில் வாழும் மக்கள் வரை எந்த அளவில் பயன் பெற்றுள்ளார்கள், இந்த திட்டங்கள் அவர்களின் வாழ்வில் ஏற்படுத்தியுள்ள முன்னேற்றங்கள், மாற்றங்கள் குறித்து திட்டக்குழு மேற்கொண்ட ஆய்வுகளில் கிடைத்த புள்ளி விவரங்களை விரிவாகக் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார். திட்டங்கள் மக்கள் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்து விரிவாகவும், ஆழமாகவும் ஆய்வு மேற்கொண்டதற்காக திட்டக் குழுவுக்கு தனது பாராட்டுகளை தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன், கூடுதல் தலைமைச் செயலாளர்/துணை முதலமைச்சர் அவர்களின் செயலாளர் பிரதீப் யாதவ், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் திருமதி எஸ்.சுதா, மாநில திட்டக் குழுவின் முழு நேர உறுப்பினர் பேரா.இராம.சீனுவாசன்.

கூடுதல் முழு நேர உறுப்பினர், பேரா.ம.விஜயபாஸ்கர், பகுதி நேர உறுப்பினர்கள் சட்ட மன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், கே.தீனபந்து, (ஓய்வு), திருமதி மல்லிகா ஸ்ரீனிவாசன், பத்மஸ்ரீ நர்த்தகி நடராஜ், பேரா.சுல்தான் அஹமத் இஸ்மாயில், மருத்துவர் ஜோ.அமலோற்பவநாதன், மருத்துவர் கு.சிவராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு புறக்கணிப்பு : ஒன்றிய அரசுக்கு கண்டனம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை எழுச்சியாக கொண்டாடுவோம்!

## கழக சட்டத்திட்டத் திருத்தக்குழு நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்! –இரா. கிரிராஜன் அறிவிப்பு!

சென்னை, பிப். 25-

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் 24.02.2025 திங்கட்கிழமை மாலை 5.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன், எம்.பி. தலைமையில், சட்டதிட்டத் திருத்தக்குழு இணைச் செயலாளர்கள் வேலூர் ஞானசேகரன், முன்னாள் எம்.எல்.ஏ., - சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினர்கள் தென்றல் செல்வராஜ், ஒரத்தநாடு பி. இராசமாணிக்கம், திருப்பூர் சுப்பையன், போலீஸ் வெ. கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.



கழக சட்டதிட்ட திருத்தக் குழு மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் அதன் செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி. ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் மாநில நிர்வாகிகள் வேலூர் ஞானசேகரன், தென்றல் செல்வராஜ், ஒரத்தநாடு பி.இராசமாணிக்கம், திருப்பூர் சுப்பையன், போலீஸ் வெ.கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கழக சட்டதிட்டத் திருக்குழு உறுப்பினரும் - ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவரும் - நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான கோவை இரா. மோகன் அவர்கள் மறைவுக்கு இக்கூட்டம் தனது ஆழ்ந்து இரங்கலை தெரிவித்துக் கொள்வது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானங்கள் வருமாறு:

**முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்!**

முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளான மார்ச்-1 அவரது பிறந்த நாளினை "இளைஞர் எழுச்சி நாளாகக்" கொண்டாடி வந்த நிலையில், திராவிட இயக்கத்தினால் "தளபதி" என்னும் சிறப்புப் பெயரோடு அழைக்கப்பட்டவர்கள் மூன்று பேர். பட்டுக்கோட்டை அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி, 'தளபதி அழகிரிசாமி' என்றும் - பேரறிஞர் அண்ணா அவர்கள் "தளபதி அண்ணாதுரை" என்றும் அழைக்கப்பட்டனர். அதற்குப் பிறகு தற்போது கழகத்தின் ஒப்பற்றத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் "தளபதி" என அழைக்கப்படுகிறார். திராவிட இயக்கத்தின் கொள்கைகளையும் - தமிழகத்தின் வளர்ச்சியையும் முன்னெடுத்துச் சென்று தமிழ்நாடு பெருமை பெற "தளபதி" அவர்கள் பல்லாண்டு காலம், நலமுடனும், பலமுடனும், வளமுடனும் வாழ இக்கூட்டம் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

கழகத் தலைவர் அவர்களுடைய 72வது பிறந்த நாளை கழக சட்டத்திட்ட திருத்தக்குழு சார்பில் எழுச்சியாக கொண்டாடுவதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

**வழக்கறிஞர்கள் திருத்த சட்ட வரைவு - 2025த்தினைஹ முற்றிலுமாக திரும்ப பெற வேண்டும்**

பாசிச பாஜக அரசு கொண்டு வந்துள்ள வழக்கறிஞர்கள் திருத்த சட்ட வரைவு 2025 என்பது சட்டத் துறையின் சுதந்திரம் மீது தொடுக்கப்படும் நேரடித் தாக்குதல் ஆகும்.

முதலில், NJAC வழியாக நீதிபதி நியமனங்களை அபகரிக்க முயன்றது. பின்னர் நீதிபதி நியமனங்கள் மற்றும் பணியிட மாற்றங்களில் கொலீஜியத்தின் பரிந்துரைகளைப் புறந்தள்ளியது. 2014 முதல். ஒன்றிய பா.ஜ.க. அரசானது ஒன்றன் பின்ஒன்றாக நீதித்துறையின் சுதந்திரத்தைச் சிதைத்து வருகிறது.

தற்போது பார் கவுன்சில்களின் கட்டுப்பாட்டைத் தன் கையில் எடுத்துக் கொள்ள முயல்வது மூலம் சட்டத் தொழில் தன்னாட்சியை பறித்து, நீதித்துறையின் சுதந்திரத்தை பலவீனப் படுத்த பார்க்கிறது. 'தமிழ்நாடு-புதுச்சேரி பார் கவுன்சில்' என்ற பெயரை "மெட்ராஸ் பார் கவுன்சில்" என மாற்ற நினைப்பதன் மூலம் பா.ஜ.க.வுக்கு தமிழ் மேல் உள்ள வெறுப்பு இந்தச் சட்ட வரைவிலும் தெளிவாக வெளிப்பட்டுள்ளது. தமிழ்நாடு வெறும் பெயரல்ல, அது எம் அடையாளம்!

வழக்கறிஞர் சங்கங்களின் கடும் எதிர்ப்புகளால் தற்போது இந்த சட்டமுன் வடிவை ஒன்றிய அரசு திரும்பப் பெறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. எனினும், இது மீண்டும் பரிசீலிக்கப்பட்டு. புதிய வடிவில் கொண்டு வரப்படும் என்பது கண்டனத்துக்குரியது ஆகும்.

இந்தச் சட்டவரைவை முற்றிலுமாகத் திரும்பப் பெற வேண்டும். சட்டத் தொழிலின் தன்னாட்சியை உறுதி செய்ய வேண்டும் என ஒன்றிய பா.ஜ.க அரசை இந்த சட்டதிட்டதிருத்தக் குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் வலியுறுத்துகிறது.

**ஈரோடு கிழக்கு சட்டமன்றத் வாக்காளர்களுக்கு நன்றி!**

முதலமைச்சர் கழக தலைவர் தளபதி அவர்களின் நல்லாட்சிக்கு சான்றாக அவரின் வேண்டுகோளை ஏற்று மூன்றாவது முறையாக ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளரான திரு.கே.சி.சந்திரகுமார் அவர்களை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற செய்த ஈரோடு கிழக்கு தொகுதி வாக்காளர்களுக்கு இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

தமிழ்நாட்டிற்கு ஒதுக்க வேண்டிய சர்வ சிக்ஷா அபியான் (SSA) நிதியை ஒன்றிய அரசு உடனடியாக நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டும். ஒன்றிய பாஜக அரசு சர்வ சிக்ஷா அபியான் (SSA) திட்டத்தின் முலம் தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய தொகை ரூ. 2152 கோடியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும்; மேலும், கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றம் செய்திட வேண்டுமென்று ஒன்றிய அரசை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்குவதில் தொடர்ந்து மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பாரபட்சம் காட்டுவதுடன், தொடர்ச்சியாகத் 'தமிழ்நாடு" என்ற பெயரே இல்லாமல நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்த மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஐயாயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே 'இரும்பின் பயன்பாடு', தமிழ்நாட்டில் தொடங்கிவிட்டது, சிந்து வெளிக்கும் முந்தைய தொன்மை யான நாகரீகம் 'தமிழர் நாகரீகம்" என்ற அகழாய்வு முடிவுகள் மூலம் தமிழரின் தொன்மையை உலகறிய செய்த தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## முதல்வரின் பிறந்த நாளை இல்லம்தோறும் கொண்டாடுவோம்!

# 20 ஆயிரம் கோடி ரூபாய் வர்த்தகக் கடனை தள்ளுபடி செய்த முதல்வருக்கு நன்றி!

## கவிஞர் காசிமுத்துமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற – கழக வர்த்தகர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, பிப்.25-

சென்னை அண்ணா அறிவாலய கலைஞர் அரங்கில், 23-02-2025 அன்று தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், தலைவர்கள் கூட்டம் தி.மு.க. வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.



சென்னை அண்ணா அறிவாலய கலைஞர் அரங்கில் தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், தலைவர்கள் கூட்டம் தி.மு.க. வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

இளைஞர் எழுச்சி நாளாம் 01-03-2025ல் அனைத்து சாதி பறவைக்கும் ஆலமரமாய், அரசியல் புத்தகத்தின் அட்டைப்படமாய், "ஒரு நிமிடம் போதுமென" தமிழ்த்தாயின் கழுத்தை நிமிர்த்திய பேனா, தமிழை தடுக்கும் இந்தி எனும் எலுமிச்சை மீது ஏறி நிற்கும் ஆரூர்த்தேர், ஆரியத்தை வீழ்த்தி வரும் அக்னி பறவை, எம்மாசனத்திலும் கம்பீர சிம்மாசனம், குளக்கரையில் உதித்து, தினமும் கடற்கரையை வணங்கும் காணா சூரியனாய் அடுத்த நூற்றாண்டுக்கும் தலைப்புச்செய்தியாய் திகழும் தமிழக முதல்வர் கழகத் தலைவர் தளபதி பிறந்த மார்ச் 1ல் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்குவதுடன், முதியோர் இல்லம் கருணை இல்லம் தொழுநோயாளிகள் இல்லம் ஆகியவற்றில் அறுசுவை உணவு வழங்குவதுடன், இரு வண்ண கொடி ஏற்றி, வேட்டி, சேலை, மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம், கவியரங்கம், பொதுக் கூட்டம், இரத்ததான முகாம் என நலத்திட்டங்களை அந்தந்த ஏரியாவில் நடத்திட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

**உரிமம் புதுப்பித்தல்!**

வணிகர்களின் சுமை குறைத்திட ஆண்டுக்கு ஒரு முறை தொழில் வணிக உரிமையை புதுப்பித்தல் என்பதனை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை உரிமம் புதுப்பித்தால் போதும் என நமது வர்த்தகர் அணியின் கோரிக்கையை ஏற்று மூன்றாண்டுக்கு ஒரு முறை உரிமம் புதுப்பித்தால் போதும் என சட்டத்தில் வழி தந்த சொந்தமாய் உருவான சுயமரியாதைச் சுயம்பு, நம்மை காக்கும் திராவிட நரம்பு, தமிழ்நாடு முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

நகராட்சி கட்டிடங்களை 9 வருடத்திற்கு ஒருமுறை ஏலம் என்பதை 12 ஆண்டுக்கு ஒரு முறை என மூன்று ஆண்டு நீட்டிப்பு கொடுத்த கோடை இடி போலக் குமுறுகின்ற மேடை இடி, தளபதி, தமிழ்நாடு முதல்வருக்கு இம்மாமன்றம் நன்றி தெரிவிக்கிறது.

வாரிய உறுப்பினராவதற்கு ரூபாய் 500/ கட்டணம் என்பதை தளர்த்தி, பத்து காசு இல்லாமல் சேரலாம் என அறிவித்து, அதன்மூலம் 48,000 கடைதாரர்களின் குடும்பங்களுக்கு வாழ்வு தந்த சுயமரியாதைச் சரித்திரத்தின் ஆரம்ப கால அத்தியாயம் முதல்வர் தளபதிக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

**நல வாரிய உறுப்பினர் மறைந்தால் குடும்ப நிதியை உயர்த்திய முதல்வர்!**

வணிகர் நலவாரிய உறுப்பினர்கள் மறைந்தால் அவரது குடும்பத்துக்கு குடும்பநல உதவியாக ஒரு லட்சம் வழங்கியதை மும்மடங்கு உயர்த்தி மூன்று லட்சமாக உயர்த்திய தொண்டர்கள் தினம் பாடும் திராவிடமாடல், தங்கத்தளபதிக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

நகராட்சி, மாநகராட்சி கட்டிடங்களை இடித்து, புதிதாக கட்டும்போது பழைய கடைதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளதை இப்பேரவை அறிவாலயம் முதல் தலைமைச் செயலகம் வரை வீறுநடை கொண்டவராம், தமிழ்நாடு முதல்வர் தளபதிக்கு நன்றி கூறுகிறது.

**வர்த்தக கடன் தள்ளுபடி!**

உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும், அதை வாங்கி விற்கும் வியாபாரிகளுக்கும் நன்மை தரும் வகையில் விவசாயத்திற்கு தனி பட்ஜெட் வழங்கிய திராவிட வீரன், தளபதிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

**வியாபாரிகள் சார்பில் நன்றி!**

டங்க்ஸ்டன் சுரங்கம் அமைக்க ஒன்றிய அரசு, எடுத்த முடிவினை மக்களின் நலன் காக்கும் வகையில், நான் முதல்வராக இருக்கும் வரை நடக்க விடமாட்டேன் என்று சட்டசபையில் உயிர் சபதம் ஏற்று, தடுத்து நிறுத்திய தமிழ்நாடு முதல்வருக்கு வியாபாரிகள் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

ராமரை காட்டிலும், ராமரின் திருநாமத்துக்கு மகிமை அதிகம் என்பர் சிலர். அதே போல் எங்கள் தளபதி நேரில் செல்வதைவிட அவர் பெயரை சொல்லி வாக்கு கேட்டாலே, எதிர்த்து போட்டியிட்ட அனைவருக்கும் காப்புத் தொகை காலி என்கிற வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை, மின்னாமல், முழங்காமல் வருகின்ற மழை போல் மேடை போடாது, தலைவர் தேடி வருகை இல்லாது வாக்கு குவித்து தந்த ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும் காவிய நாயகன், அண்ணாவின் கட்டை விரல், கலைஞரின் சுட்டு விரல் தமிழக முதல்வருக்கும் எங்கள் நன்றி!

**தேர்தலில் பா.ஜ.க.வுக்கு சவுக்கடி தருவோம்!**

தமிழனின் 5000 ஆண்டு கால "வரலாற்றை", "நாகரீகத்தை" உலகத்திற்கு எடுத்துக் காட்டும் வகையில் இரும்பின் பயன்பாடு மூலம் அகழாய்வு முடிவால் வெளிக்கொணர்ந்த முத்தமிழறிஞரின் முத்தான பிள்ளையாம் தளபதிக்கு நன்றி.

ஒன்றிய அரசின் புதிய கல்வி கொள்கையை ஏற்று PM SRHI திட்டத்தை செயல்படுத்தாத காரணத்தால் தமிழ்நாட்டுக்கு 5000 கோடி நிதி இழப்பு செய்யும் ஒன்றிய அரசுக்கு, ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு இம்மாமன்றம் கண்டனம் தெரிவிக்கிறது.

மாநில உரிமை கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிராக தொடர்ந்து பேசிவரும் ஆளுநர் ரவியை கண்டிப்பதுடன், ஒன்றியத்தில் பாஜக ஆளும் வரை ரவியே நீடிக்கவேண்டுகிறோம்.

**இளம் பேச்சாளர்களை உருவாக்கும் இளைஞர் அணிச் செயலாளர்!**

இளம் பேச்சாளர்கள் பயிற்சி முகாம், கண்டன கூட்டம் என நில்லாமல் சுழலும் நிர்வாகப்பம்பரமாய் சுழலும் இளைய நிலா, இளைய தலைவர் கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை இம்மாமன்றம் பாராட்டுகின்றது, நன்றி கூறுகிறது.

தந்தை பெரியார் மீது எதிரியும் கூட அஞ்சும் சொற்களை, பொய்யாக கூறுவதுடன் ஆதாரமின்றி பேசும் இணத்துரோகிகளுக்கு நீதிமன்றம் சாட்டையடி கொடுக்கவேண்டுகிறோம்.

எதிர்கட்சிகளின் திருத்தங்களை ஏற்காது, அவசரமாக ஒன்றிய அரசு கொண்டுவந்த வக்பு வாரிய மசோதாவிற்கு இம்மாமன்றம் தன் கண்டனத்தை தெரிவிக்கிறது.

தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்ட மெல்லும்பான், மசாலா குட்கா போன்ற புகையிலை பொருட்களை இந்தியா முழுவதும் தடை செய்யவும், உற்பத்தி ஆகும் இடத்திலேயே தடைசெய்திடவுடம் ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறோம்.

மும்மொழி திட்டத்தில் தமிழ் உண்டு என்று ஏமாற்றும் ஒன்றிய அரசின் நவோதயா பள்ளியில் தமிழ் இல்லை என்பதை சுட்டிக்காட்டுவதுடன் 5000 ஆண்டு முன்பு வந்த தமிழ் 400 ஆண்டு முன் வந்த இந்திக்கு அடிமையாகி நாம் முட்டாளாக முடியாது என்பதை ஒன்றிய அரசுக்கு இம்மாமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

பேக்கிங் பொருட்களுக்கு வரி என்கிற பெயரில் 25 கிலோவுக்கு மேலே 30 கிலோவாக மூட்டை போடும் அரிசிக்கு வரி, 20 கிலோ மூட்டை அரிசிக்கு வரி இல்லை என்கிற கோமாளி கூத்தை மாற்றிட உணவு பொருட்கள் எந்த வடிவில் சென்றாலும் G.S.T. இல்லை என ஒன்றிய அரசு அறிவிக்கவேண்டும்.

**கழக அரசின் சாதனைகளை கடைகள் தோறும் எடுத்துரைப்போம்!**

2026 சட்டமன்ற தேர்தல் நெருங்கி வருவதால், சாதனையின் சிகரமாய் திகழும் தளபதியின் நான்காண்டு சாதனைகளை துண்டுபிரசுரங்களாக்கி கடைவீதிகளில் உள்ள கடை உரிமையாளர்கள் மூலம் மக்களிடம் சேர்த்து, 234க்கு 234 என்கிற இலக்கை, இலட்சியத் தலைவராம் தளபதியின் கரங்களில் சமர்ப்பிப்போம்.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் தலைமைக் கழகத்தால் புதிதாக நியமிக்கப்பட்ட கிருஷ்ணகிரி சீனிவாசன், பெரம்பலூர் மாவட்ட குன்னம் ராஜேந்திரனுக்கு வரவேற்பு கொடுக்கப்பட்டது. கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோ.வி.செழியன் மற்றும் மாநில நிர்வாகிகள் வி.பி.மணி, ராமகிருஷ்ணன், சத்தியமூர்த்தி, சுந்தரவரதன், தாமரை பாரதி, பாண்டி செல்வம், மாவட்ட அமைப்பாளர்கள் கோவை மாரி செல்வன் சந்தீப், சென்னை வடகிழக்கு தியாகராஜன், சென்னை வடக்கு கூல் கூல் பிரகாஷ், சென்னை மேற்கு விஜயராஜ், சென்னை தென்மேற்கு பாலு - தி.நகர் மாயா, ராஜமாணிக்கம், சீனிவாசன், தென் சென்னை ஏ.எஸ்.மகேந்திரன், சரவணன், இராமமூர்த்தி, சேலம் ஜெயவேல், பன்னீர் செல்வம், செல்வன், காஞ்சி தினகரன், ரவி, ஒசூர் சரவண குமார், தூத்துக்குடி ரங்கநாதன், கன்னியாகுமரி செல்வன், தென்காசி முத்துக்குமார், விழுப்புரம் வெங்கடேசன் - ஆனந்த், கிருஷ்ணகிரி மணி விஜயன் உள்ளிட்ட நிர்வாகிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## நே.சிற்றரசு – எழிலன் நாகநாதன் – எஸ்.ஜோயல் – வினோத் வேலாயுதம் – பா.பிரகாஷ் பங்கேற்பு!

# ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி அமைப்பாளர் வ.வேல்குமார் அறிவிப்பு!

சென்னை, பிப்.25-

கழகத் தலைவர் - முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்களுடைய 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி இளைஞரணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் இன்று (25.02.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 6:00 மணி அளவில் ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இதில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலின் நாகநாதன், இளைஞர் அணி மண்டல பொறுப்பாளர் எஸ். ஜோயல், பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம், சென்னை மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பா.பிரகாஷ் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் என்.மோகனவேல், ஜே.எம். ஹெச்.இம்ரான், கே.குட்டி, ப.பாலசந்தர், வி.தினேஷ் குமார் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

இக்கூட்டத்திற்கு இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : மார்ச் 1 கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள் பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகள்

வட்டம்தோறும் இளைஞரணி பெயர் பலகைகள் திறப்பு

இளைஞரணி ஆக்கப் பணிகள்

இவ்வாறு இளைஞர் அணி பகுதி அமைப்பாளர் வ.வேல்குமார் அறிவித்துள்ளார்.